UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
01-8-1985
PERIODICAL DIVISION
LIBRARY

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 | ஆடி 17 | ஜுல்ஹஜ் 13 | இதழ் 172
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 1-8 1985

## கோட்டை ரயில்நிலயத்தில் அமளிதுமளி!

### ரயில்சேவையும் பாதிக்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்புக்கோட்டை ரயில் நிலயம் நேற்றுப்பிற்பகல் பெரும்பரபரப்புக்குள்ளானது.

இதன் எதிரொலியாக சுமார் ஒரு மணிநேரம் கோட்டை ரயில் நிலயத்தில் ரயில் சேவை நடைபெறவில்லை.

கோட்டை ரயில்நிலயத்தை நோக்கி வந்த சகல ரயில்களும் மருதானை ரயில் நிலயத்தில் நிறுத்தப்பட்டன.

நடந்தது இதுதான்,

நேற்றுப்பிற்பகல் சுமார் மூன்றரை மணியளவில் கோட்டை ரயில் நிலயத்துக்கு அனுமதேய தொலைபேசி அழைபொன்று வந்தது.

நான்கு மணிக்கு ரயில் நிலயம் குண்டு வைத்துத் தகர்க்கப்படும் என்று அந்த அழைப்புக்கூறியது

தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து கோட்டை ரயில் நிலயத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன. கோட்டையை

(8ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி-தீவிரவாதக்குழுக்கள்

# சென்னையில் இன்று சந்திப்பு

## 'திம்பு'பிரதிநிதித்துவம்பற்றி தீவிரமாக ஆராயப்படும்

### முன்னாள் சி.ஐ.டி. தலைவர் டில்லி விரைவு

(சென்னை)

பூட்டான் பேச்சுவார்த்தை தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து ஆராயும் [illegible] தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும், தீவிரவாதத் தலைவர்களும் கலந்து கொள்வார்கள்.

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் சார்பில் யார் யாரை பூட்டானுக்கு அனுப்புவது என்பதே இன்று நடைபெறும் சந்திப்பில் முக்கிய விஷயமாக இருக்கும் என்று நேற்றிரவு 'ஈழநாடு'க்குக் கிடைத்த ஊர்ஜிதமான தகவல்கள் தெரிவித்தன.

சென்னையில் இன்று காலை நடைபெறும் மேற்படி கூட்டத்துக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு எம்

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் கருத்தை ஜனாதிபதி அறிகிறார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அமைச்சர்களின் அபிப்பிராயங்களை ஜனாதிபதி அறிந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

[illegible] பரின் 2ஆம் கட்டமாக நடைபெறவுள்ள மகாநாட்டில் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் கல்வி, நிலப்பிரிவு உட்பட பலபிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## சிலர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் உள்ள டாக்டர் இராஜேந்திரா வீட்டில் இடம்பெற்ற லட்சம் ரூபா நகைக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக தீவிரவாத இளைஞர் கோஷ்டி ஒன்று சில நபர்களை விசாரணைக்குட்படுத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (மா)

## உகண்டாவில் வெளிநாட்டவர் வெளியேற்றம்!

(கம்பாலா)

உகண்டாவில் குடியிருந்த பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் சுமார் நூறு வாகனங்கள் மூலம் நைரோபிக்கு நேற்று இடம்பெயர்ந்தனர்

ஐ நா. நிறுவனம் உலக வங்கி, சர்வதேச நிதிப் பிரிவு, ஆகிய அமைப்புக்களையும், பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், சோமாலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர். (ரா)

## முஸ்லிம்குழு நாளை புறப்பாடு

(கொழும்பு)

பூட்டான் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் நிலைமை குறித்தும் ஆராயப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக முஸ்லிம்களின் பிரமுகர்குழுவொன்று நாளை இந்தியா செல்லவுள்ளது

அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தலைமையில் செல்லும் முஸ்லிம் பிரமுகர்குழு இந்தியாவில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும், தமிழீழ தீவிரவாத இயக்கங்களின் தலைவர்களையும் சந்தித்து முஸ்லிம்களின் பங்குகுறித்து வலியுறுத்தவிருக்கிறது

இந்தியா செல்லும் முஸ்லிம் பிரமுகர் குழுவில், சட்டத்

(8-ம் பக்கம் பார்க்க)

## சீக்கிய இளைஞர் பின்னணி?

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், தொழிற் சங்கத் தலைவருமான திரு லலித் மாக்கன் படுகொலையின் பின்னணியில், சீக்கிய இளைஞர்கள் சம்பந்தப்பட்டுள்ளனரா?

நேற்று இரவு விசாரணைக்குட்படுத்தப்பட்ட ஐந்து நபர்களின் சாட்சியங்களைத் தொடர்ந்து மேற்படி சந்தேகம் கிளம்பியிருப்பதாக புதுடில்லி பொலிஸ் கமி

(8-ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டு 7 மாதம்; இன்னும் தகவல் இல்லை!

(புலோலி)

மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் கடமையாற்றி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட புலோலியைச் சேர்ந்த திரு வ. தங்கராசா (29வயது), வரணியைச்சேர்ந்த திரு வ. விஸ்வநாதன் (28 வயது) ஆகிய இரு இளம் அரசாங்க நிலஅளவையாளர்களும் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டு ஏழுமாதங்களாகியும் அவர்கள் எங்கே

(8-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் நெருங்கிய சகா சுட்டுக் கொலை!

[புதுடில்லி]

புதுடில்லியில் இந்திராகாங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த லலித் மாக்கன் என்ற பாராளுமன்ற உறுப்பினரும் அவர் மனைவியும் மற்றொருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை இவர்களின் வீட்டில் வைத்தே இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

'ஸ்கூட்டரில்' வந்த இருவர் இவர்களை சுட்டதாகக் கூறப்படுகிறது

இவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து அங்கு மரணமானார்கள்.

தெற்குடில்லியைப்பிரதிநிதித்துவப்படுத்திய லலித் மாக்கன்

(8ம் பக்கம் பார்க்க)

★ பரந்தன் சம்பவத்தின் எதிரொலி

## ஹெலிகாப்டரிலிருந்து துப்பாக்கிச்சூடு! இளைஞர் பலி; பலர் காயம்!!

### வெற்று டாங்குகள் தகர்க்கப்பட்டன!.!

(கிளிநொச்சி)

பரந்தன் ரயில் நிலயத்தில் நடந்த பரல்கள் (டாங்கிகள்) கடத்தலைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குமரபுரத்தைச் சேர்ந்த சந்திரன் (20 வயது) என்பவர் பலியானார், பலர் காயமடைந்தனர்.

ஆனையிறவு இராணுவ முகாமிற்கு கொண்டுவரப்பட்ட 8 எரிபொருள் பரல்கள், பரந்தன் ரயில்நிலயத்தில் வைத்து துப்பாக்கி முனையில், இனந் தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டு சேத மாக்கப்பட்டன

நேற்று முன்தினம் [illegible] பெற்றோல் சேகரித்து வைக்கப்படும் பெரிய பரல்கள் ரயில் மூலம் கொண்டுவரப்பட்ட போதே இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து பரந்தன் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட ஹெலிகாப்டர் [illegible] வர் சுட்டதில் 20 வயது இளைஞர் ஒருவர் மரணமானார். பலர் காயமடைந்தனர்.

பெரிய அளவிலான 'டாங்கிகள்' கடத்தலை அடுத்தும் ஹெலிகாப்டர் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்து 8 பேர் பலி!

(பெய்ரூட்)

லெபனானில் கார் ஒன்றுக்குள் இருந்த குண்டு வெடித்ததால் எட்டுப்பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ 250/- ரூபா. தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4676

மீசாலை வடக்கு புத்தூர் றோட் சந்திக்கும் கண்டிறோட்டுக்கும் அண்மையில் உள்ள சின்னத்தம்பி - செல்லையாவின் 7½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்ட வசதியானதும். நல்லின மா, பலா, பனை, தென்னை என்பனவற்றின் பிரயோசனங்களுடன் விற்பனைக்குண்டு தொடர்பு: C/o. சி பொ. மயில்வாகனம், சட்டத்தரணி, சாவகச்சேரி. 4744

சங்கரத்தையில் தொழிற்சாலை நிறுவக்கூடிய மின்சாரம், போக்குவரத்து வசதிகளுடன் 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சோ. சிதம்பரநாதன். சங்கரத்தை. வட்டுக்கோட்டை. 4739

E. N. தொடர்பிலக்க மொறிஸ் மைனர் கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- பவானி பரமசாமி, ஆஸ்பத்திரி லேன், இணுவில் மேற்கு. (4792)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் கோப்பாய்த் தபாற்கந்தோருக்கு முன்னுள் அடுத்துள்ள புதிய கட்டுக் கிணறும், மலகூடமுமடங்கிய ஒன்றரைப் பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. குலேந்திரன், சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாய் தெற்கு. மானிப்பாய் 4770

புத்தூர் சிவன்கோவில் தெற்கு வீதியில் 4½ பரப்பு வீடுகட்டக்கூடிய எல்லா வசதியுடனான காணியும், நாவற்குழி கேரதீவு றோட்டில் பாடசாலைக்கு எதிரேயுள்ள ஒழுங்கையில் 28 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியது: பெ. விக்னேஸ்வரன், பாக்கியம் றேட் சென்ரர், பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். 4774

தெல்லிப்பழை பலாலிக்கு அண்மையில் வீடுகட்ட உகந்த 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: மு சிவபாலசிங்கம், மெயின் வீதி, தெல்லிப்பழை. 4786

நவாலி றோட்டுக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; சராமாஸ்டர், 18 கண்டி றோட், யாழ்ப்பாணம். 4762

மீசாலை வடக்கு வேம்பிராய்ச் சந்திக்கு அருகாமையில் புத்தூர்ச் சந்தி வேம்பிராய் றோட்டில் மா, தென்னை பனைகள் நிறைந்த மின்சார வசதிகளுடன் கூடிய 7½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: மு. தனபாலசிங்கம், மீசாலை வடக்கு, கொடிகாமம். 4782

## தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம் உயர் விலைக்குப் பெறப்படும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 4677

## தேவை

பேக்கரி வேலைக்கு உடனடியாக அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. தொடர்பு: அம்மே அப்பா பேக்கரி, மகாஜனக் கல்லூரி அருகாமை, தெல்லிப்பழை. 4783

அண்மைக்கால ஆங்கில, தமிழ், ஹிந்தி மற்றும் பக்திப் படங்களின் வீடியோ கஸெட்டுகள் உடன் தேவை. 'கவிதா வீடியோ கிளப்' 550/6 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 4764

பல இன கோழிகளும் இறைச்சிக்குத் தேவை. கிலோ 25 ரூபா முதல் 30 ரூபாவரை நேரில் வந்து பெற்றுக்கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். போன்: 23131. 4729

## சேவை

அரசாங்கத்தினால் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டு 20 வருடம் கோட்டடியில் பிறப்பு. இறப்பு, கலியாண உறுதிப்பத்திரங்கள் மொழிபெயர்த்து தட்டச்சு செய்து கொடுக்கிறேன். இடம்; தற்போது மானிப்பாய் சந்தியின் தெற்கோர ஒழுங்கையில் றோட்டிலிருந்து 50யார் தூரம். ஆ. இரத்தினசபாபதி. 4768

## காணவில்லை

வவனியாவைச் சேர்ந்த குழந்தைவேலு முருகேசு எனும் 12 வயதுச் சிறுவன் 30-ம் திகதி முதல் தெல்லிப்பழையிலிருந்து காணவில்லை. இவர் கறுப்பு நிறமுடையவர். இவர் கடைசியாக நீலக் கால் சட்டையும், வெள்ளை மேல் அங்கியும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் விலாசங்களில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். துர்க்கா பலன், மல்லாகம். குழந்தைவேல், சிவன் கோவிலடி, பண்டாரி குளம், வவனியா. 4788

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்து வேளாளரும், இங்கிலாந்தில் கடமையாற்றுபவரும், B Sc பொறியியலாளரும், 31 வயதானவருமான மணமகனுக்கு இவந்த அழகிய தோற்றமுடைய 27 வயதிற்குட்பட்ட கணக்காளர் சுருக்கெழுத்து தட்டெழுத்து அல்லது வேறு விசேட கல்வித் தகைமையுடைய மணமகள் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லாதவர்கள் சாதகக் குறிப்புடன் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். இங்கிலாந்தில் தொழிலாற்றும் அல்லது வசிக்கும் மணமகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். விளம்பர இல: 4769, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4769

## விளையாட்டுப் போட்டி

(மண்டைதீவு)

மண்டைதீவு புனித பேதுருவானவர் இளைஞர்மன்ற இல்ல விளையாட்டுப் போட்டி நாளை 2-ம் திகதி மன்றத் தலைவர் திரு. இ. ஆ. பீற்றர் தலைமையில் மண்டைதீவுஈச்சந்தரவை மைதானத்தில் நடைபெறும்,

இப்போட்டிக்குமண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலய பங்குத்தந்தை அருட் திரு கமிலஸ் நிமலன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

## ஏல விற்பனை

4-8-85 ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை பாவிக்கப்பட்ட துண்டுக் கம்பிகள், முறுக்குக் கம்பிகள், "ஆங்கில் அயன்" எச். ஐ. வடிவ உருக்கு திராந்திகள் என்பன லங்கா சீமெந்து லிமிட்டெட் தொழிற்சாலையில் ஏல விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்களைப் பார்வையிட விரும்பும் கொள்வனவாளர்கள் 3-8-85 சனிக்கிழமை தொழிற்சாலை வளவில் பார்வையிடலாம்.

பொருட்களின் விலையின் 3-ம்கூற்று முடிவடைந்தவுடன் முழுத்தொகையின் 3/1 பணம் கொள்வனவாளரால் செலுத்தப்பட்டு, மிகுதி அடுத்த 24 மணி நேரத்தில் செலுத்தப்பட வேண்டும். பொருட்கள் விற்கப்பட்ட திகதியில் இருந்து 48 மணி நேரத்தில் விற்கப்பட்ட பொருட்கள் எங்கள் தொழிற்சாலை வளவில்இருந்து அகற்றப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்
லங்கா சீமெந்து லிமிட்டெட்
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.
1985-06-25

(4740)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

ஏழாலை ஏழாலைமேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு பாலசுந்தரம் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
மார்க்கண்டு பாலசுந்தரம்
கைம்பெண் சிவக்கொழுந்து(?) மலர் ஏழாலை மேற்கு, ஏழாலை.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 238

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனமில்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை விதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 7 ஆம். நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைபடுத்தப்படுகின்றீர்.

ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

1985 ஆண்டு வைகாசி மாதம் 2 ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. என்னால் எழுதப்பட்டது.

செ. இராமலிங்கம்.
பதிவு பெற்ற சட்டத்தரணி.
4745

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றேயல்
கோப்பி
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு

## 1-வது பிறந்ததின வாழ்த்து

செல்விகள் — கலைவாணி — இசைவாணி



ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த இராஜயோகன் - பூமா தம்பதிகளின் செல்வப் புதல்விகள் தமது முதலாவது பிறந்த தினத்தை 01-08-85 (இன்று) வியாழக்கிழமை குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். செல்விகளை அப்பா, அம்மா, அண்ணு, அப்பு. அப்பம்மா, முல்லைத்தீவு அம்மம்மா, லண்டன் சித்தப்பா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா, சித்தி, அக்காமார், மற்றும் உறவினர்கள் வாழ்த்துகிறார்கள்.

(4772)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

திரு. நாகலிங்கம் நடராசா



தோற்றம்:-
1915-10-03

மறைவு:-
1983-07-26

திதி:-
1985-08-01

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி — மக்கள் — மருமக்கள்
— பேரப்பிள்ளைகள்.

நந்தாவில்,
கொக்குவில்.

(4758)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

சின்னப்பு
சத்தியேஸ்வரன்
(சத்தி)



மலர்வு:-
25-10-1951

மறைவு:-
25-07-1983

திதி:-
01-08-1985

தவமிருந்து பெற்ற செல்வா! தேசத் தொண்டா! கொடை வள்ளல் கர்ணு! தன்னுயிரிலும் பார்க்கப் பிற உயிரைக் காத்த செல்வா! எங்கள் உயிர்த் தம்பி! நீ உனக்காக அன்றி பிறர்க்காக "செல்வச் சந்நிதி முருகனிடம்" வரம் வேண்டச்சென்ற காலை காலன் உருவில் வந்து அழைத்துச் சென்றோர் உன்னை மீளாத் துயில் கொள்ளச் செய்தனரே!

எங்கள் உயிர் எங்களை விட்டுப் பிரியும் வரை
உன் நினைவால் உருகும்

அன்புப் பப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், "திருத்தணிகை", மைத்துனர்கள், மருமக்கள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(4562)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொற்கோயிலில் தீவிரவாதிகள் - மிதவாதிகள் —

# மோதல் மத்தியிலும் பஞ்சாப்தீர்வு உடன்பாடு ஏற்கப்பட்டது!

அமிர்தஸரஸ், ஜூலை-31

ராஜீவ் – லோங்கோவால் உடன்படிக்கை தொடர்பாகச் சீக்கிய வாதிகளுக்கும், மிதவாதிகளுக்கும் இடையே நேற்று பொற் கோயிலில் மோதல் இடம்பெற்றது. ஆயினும் இந்த உடன் படிக்கையைப் பெரும்பாலான சீக்கியர்கள் பொற்கோயிலில் ஏற்றுக்கொண்டனர். இதன்மூலம் சர்தார் ஹர்ச்சன்சிங் லோங்கோவால் தமது நிலையை ஸ்திரப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளார்.

சீக்கியர்களின் கூடுதல் உரிமைக் கோரிக்கைகள் வலுப்பெற்ற இடம் அமிர்தஸரஸ் பொற்கோயிலாகும்.

இங்கிருந்தே தீவிர-மிதவாத சீக்கியர்கள் தமது போராட்டத்தை வலுப்படுத்தினர்கள். கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்திய இராணுவம் 'பொற்கோயில்' முற்றுகையை நடத்தியதையடுத்து இங்கு லோங்கோவால் கைதுசெய்யப்பட்டதுடன், அதிதீவிரவாதியான பிந்திரன்வாலே கொல்லப்பட்டார்.

இந்த இராணுவ மோதலையடுத்து நேற்றைய தினமே பொற்கோயிலுக்குள் மீண்டும் முதற்தடவையாக மோதல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதில் பலத்த சேதம் எதுவும் ஏற்படவில்லையாயினும், மூன்று பேர் காயமடைந்தனர் என்றும், சீக்கியர்கள் ஈட்டி, கத்தி, என்பனவற்றுடனும், துப்பாக்கிகளையும் கொண்டு மோதியதாகவும்கூறப்பட்டது.

இதேவேளை சன் ஹர்ச்சன் சிங் லோங்கோவால் பஞ்சாப் தீர்வை இங்கு முன்வைப்பதில் வெற்றிகண்டுள்ளார். இவரது ஆதரவாளர்களும், பெரும்பான்மையினரான மிதவாத சீக்கியர்களும் இத்தீர்வை முழு மனதுடன் வரவேற்றுள்ளனர். (கி)

## மாவிட்டபுரத்தில் 'இடி' ஏற்படுத்திய பரபரப்பு

[மாவிட்ட புரம்]

மாவிட்டபுரத்திலுள்ள வளவு ஒன்றில் கடந்த 25-ம் திகதி நண்பகல் பலத்த சத்தத்துடன் இடிவீழ்ந்து வெடித்துச் சிதறியதால் அப்பகுதியில் பெரும் - பரபரப்பு ஏற்பட்டது. ஆனாலும் தெய்வாதீனமாக சேதம் எதுவும் ஏற்படவில்லை.

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் இடையிலுள்ள வளவு ஒன்றிலேயே இவ்வாறு இடி வீழ்ந்தது.

இந்த வளவின் ஊடாக ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டுக்கு இணைக்கப்பட்டிருந்த மின் வயரில் மின் ஒழுக்கு இருந்ததாகவும், அவ் விடயத்தில் பலத்த சத்தத்துடன் இடி வீழ்ந்து வெடித்துச் சிதறியதாகவும், அச்சமயம் அவ்விடம் பெரும் புகைமண்டலமாக காட்சியளித்ததாகவும், மின் ஒழுக்கு ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன் அதிர்ச்சியால் பலர் மூர்ச்சையாகி பின்னர் முதலுதவிச் சிகிச்சையின் பின் அவர்கள் மூர்ச்சை தெளிந்தனர்.

இந்த இடி வீழ்ந்ததையடுத்து இப்பகுதி மின்சாரத்தடை ஏற்பட்டது. அத்துடன் இப்பகுதி வீடுகளில் எரிந்துகொண்டிருந்த மின் பல்புகளும் பழுதடைந்தன.

## ராஜீவின் ராஜதந்திரம் இருப்பின் தமிழர் பிரச்னை இலகுவில் தீரும்

### திருச்சியில் 'அமிர்'

(சென்னை)

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்னையில் காட்டிய ராஜதந்திரமும், அரசியல் ஞானமும் இருக்குமானால் இலங்கை ஜனாதிபதியால் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காண்பது கடினமல்ல என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுவரைக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாஷை நிறைவேற்றக் கூடியதான தீர்க்கமான யோசனை எதனையும் திரு. ஜெயவர்த்தன முன்வைக்கவில்லையென்றும் திருச்சியில் பத்திரிகையாளரிடம் பேசிய திரு அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

## கொலையைக் கண்டித்து சுவரொட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்க நெருங்கிய ஆதரவாளர் விஸ்வநாதன் ராதாகிருஷ்ணன் (ராதா) மரணம் தொடர்பாக துண்டுப்பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் இப்படுகொலையை எதிர்த்துகண்டனச் சுவரொட்டிகளும் அஞ்சலிச் சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டுளன

படுகொலைகள் மன்னிக்கப்பட முடியாதவை. உரிமை கோரப்படாத படுகொலைகள் ஒரு தீர்ப்பல்ல. ராதாவின் படுகொலைக்கு நியாயம் காட்டுங்கள். உடன் உரிமை கோருங்கள். என்று அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்றுவந்த கதிர்காமத் திருவிழாவின் தீர்த்தத் திருவிழா இன்று காலையும், கற்பூரத்திருவிழா மாலையும்நடைபெறுகின்றன

இம்மாதம் 17-ம்திகதி ஆரம்பமான கதிர்காமத் திருவிழா நுணசையில் இன்றைய திருவிழாக்களுடன் நிறைவடைகின்றன (ப)

## உற்பத்தியை அதிகரிக்க விவசாயக் குழு தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

1985-8ம் ஆண்டுக்கான காலபோகத்தில் யாழ் மாவட்டத்தில் நெல், வெங்காயம், மிளகாய், நிலக்கடலை மற்றும் பயறுவகைகளின் உற்பத்தியை ஊக்குவித்து பழைய நிலைக்கு இப்பகுதியின் விவசாயப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கமுயல்வதென நேற்று யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

இவ்வருட யாழ் மாவட்ட விவசாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான யாழ் மாவட்ட விவசாயக் குழுவின் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

மேலதிக உதவி அரசாங்க அதிபர்கள், விவசாய, திட்டமிடல் உயர் அதிகாரிகள் மற்றும் கொழும்பிலிருந்து வந்த விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

மானாவாரி நெற்செய்கையை ஏறத்தாழ 30040 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளவதற்கு ஊக்கமளிப்பதெனவும், வெங்காயம், 6500 ஏக்கர் நிலத்திலும், மிளகாய் 6500 ஏக்கர் நிலத்திலும் சாகுபடி செய்ய ஊக்கமளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கடந்த வருடங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி திட்டமிட்ட அளவுக்கு செய்ய முடியாது போனதின் காரணமாக இம்முறை 500 ஏக்கரில் மாத்திரம் உற்பத்தி செய்வதென்றும், விதை உருளைக் கிழங்கை வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்து கொடுப்பது தொடர்பாககொழும்பு அரசு அதிகாரிகளுடன் கொடர்புகொள்வதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது,

வரும் செட்டம்பர் மாதம் உரவாரம்கொண்டாடுவதென்றும் போட்டிகள், கருத்தரங்குகளை நடத்தி விவசாயிகளை ஊக்குவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மூன்றாம் தினம் வகுப்புக்களைப் பகிஷ்கரித்துள்ளனர்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் சில தினங்களுக்கு முன்னர் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்ததும் அத்தினத்தில் வகுப்புகளுக்குச் சென்றமாணவர்களைத் தடுத்தமைக்காக சம்பந்தப்பட்ட நான்கு மாணவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததே.

வகுப்புகளுக்குத் தடைவிதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளை நேற்று பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று 2வது நாளாக வகுப்புகளைப் பகிஷ்கரித்துள்ளனர். அங்கும் வகுப்புக்களுக்குத் திரும்பிய சில மாணவர்களைத் தடைசெய்தமைக்காக 20 மாணவர்கள் வகுப்புகளுக்கு வரக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளதாம். [பெ. மா]

## பள்ளங்கள் மறைகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ் கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தியில் நீண்டகாலமாக இருந்துவந்த பள்ளம் நிரப்பப்பட்டு, தற்போது முன்போல வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது

பொதுத்தெருக்கள் திணைக்களத்தினர் இத்திருத்த வேலையைச் செய்துள்ளனர்

ஆரியகுளம் சந்தியில் ஏற்பட்ட பள்ளம் நிரப்பப்பட்டு வருகிறது (க)

## ஐ. ஆர். எ. நிகழ்ச்சி பி.பி.ஸி.க்குத் தடை!

லண்டன், ஜூலை-31

அயர்லாந்து பிரிவினைவாதிகள் குறித்த பி பி ஸி நிகழ்ச்சியொன்றுக்கு பிரித்தானிய அரசாங்கம் தடைவிதித்துள்ளது

இத்தடை பிரிட்டிஷ் பத்திரிகைத் துறையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வட அயர்லாந்து பிரிவினைவாத கெரில்லாக்களின் போராட்டம் சம்பந்தப்பட்டதாக அந்த பி பி ஸி நிகழ்ச்சி அமைந்திருந்தது

ஐ. ஆர் ஏ யின் முக்கிய புள்ளியான மார்ட்டின் மக்கினஸ் என்பவரின் பேட்டியுடன்கூடிய ஒரு விவரண நிகழ்ச்சியாக இது அமைந்துள்ளது

இந்த நிகழ்ச்சி ஐரிஸ் கெரில்லாக்களின் போராட்டத்துக்கு மேலும் உத்வேகம் அளிப்பதாக முடியுமெனக் கருதியதாலேயே பிரிட்டிஷ் அரசு இதனைத் தடைசெய்துள்ளது

இத்தடைவிதிப்பு நியாயமற்றதென சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்துள்ளன பி.பி ஸி இத்தடையை ஏற்று அந்நிகழ்ச்சியை ஒலிபரப்புவதை நிறுத்தியுள்ளது இதற்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரி நன்றி தெரிவித்துள்ளார். (கி)

## ரயில் முன்பாய்ந்து குடும்பஸ்தர் தற்கொலை

(கிளிநொச்சி)

மெயில் ரயில் முன் பாய்ந்து குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று அதிகாலை கிளிநொச்சியில் இச்சம்பவம் இடம்பெற்றது

சுமார் 40 வயதுள்ள குமார் என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார் இவருக்கு இருபிள்ளைகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இவரது மரண விசாரணைக்காக சம்பந்தப்பட்ட மெயில் ரயில்சாரதி நேரில் சமூகமளிக்கு மாறு பணிக்கப்பட்டுள்ளார். (மா)

## அதிபர் றீகனின் அழைப்பை சோவியத் தலைவர் நிராகரிப்பு!

மாஸ்கோ, ஜூலை-31

அமெரிக்காவின் அணுசக்திப் பரிசோதனையைப் பார்வையிட வருமபடி அதிபர் றீகன் விடுத்த அழைப்பை சோவியத் தலைவர் திரு கோபச்சேவ் நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவின் 'நெவாடா' பாலைவனத்தில் அமெரிக்காவின் நவீன அணுசக்திப் பரிசோதனையொன்று இடம்பெறவுள்ளது. இப்பரிசோதனையில் அமெரிக்கத் தொழில்நுட்பத்தைப் பார்வையிட வரும்படியே சோவியத்துக்கு திரு. றீகன் அழைப்பு விடுத்திருந்தார்.

திரு. கோபச்சேவ் இந்த அழைப்பை நிராகரித்திருப்பதை சோவியத்தின் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தெரிவித்தது.

ஜப்பானில் அணுகுண்டு [illegible] வீச்சு இடம்பெற்று 40-வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு சோவியத் இந்த ஆண்டு இறுதிவரை சகல அணுசக்திப் பரிசோதனைகளையும் நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவையும் அவ்வாறு செய்யும்படி சோவியத் தலைவர் கோபச்சேவ் கேட்டிருந்தார். ஆனால் இதற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்தது.

எனவே இந்த மறுப்புக்குப் [illegible] அழைப்பை கோபச்சேவ் நிராகரித்துள்ளார். (கி)

இல்லத்தரசி[illegible]
சிறந்த தெரிவு
றேயல்
பேகிங் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

படைத்த இறைவனை அறிவதற்கே மனிதனுக்கு அறிவைத் தந்தான் கடவுள். ஆனால், மனிதனோ படைத்தவனையே மறந்துவிடும் வகையில் அறிவைத் துஷ்பிரயோகம் செய்கிறான்.

— மகாத்மாகாந்தி.

## நமது நோக்கு

# வளத்தில் வருகின்றனர் வரவேண்டியவர்கள்

ஓரிடத்தில் புதிய வீடு கட்ட விரும்பினால் அங்கிருக்கும் பழைய குடிசையை அழித்தாகவேண்டும்.

மனிதனைப் பொறுத்தளவில், மனித சமுதாயத்தைப் பொறுத்தளவில் மனத்தின் கோணலை நிமிர்த்துதலால் நேர்மை வந்தமைகிறது.

குரோதமும், பொறாமையும், தற்பெருமையும், கசடும் நிறைந்த மனிதனோ, சமூகமோ மாற்றமடைந்தாலொழிய உய்ய வழி பிறக்காது.

சிற்றியல்பை ஒழிக்காது திம்புக்குப்போவது திம்பக்துவிற்குப் (Timbuctoo) போதல்போலாகும்.

பெரும் கைங்கரியங்களைப் பேசவேண்டுமானால் பேரியல்புவேண்டும். புதிய மனிதனை, புதிய மக்களின் புதிய பிரதிநிதியாகப் புதுப் பிறப்பெடுக்காது போனால் எந்தப் பிரயத்தனமும் பலிக்காது.

நாம் குறிப்பிடும் இரண்டாவது பிறப்பு இன்று திம்புப் பேச்சுக்களுக்குத் தயாராகும் இரு பிரிவினருக்கும் அவசியம்.

முதலாவதைப்போல் ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெறும் பிறப்பல்ல இது.

சடுதியில் எழும் மனமாற்றம்; சிந்தனைத் திறனில் ஏற்படும் புரட்சி; ஆயுதம் எதுவுமில்லாமல் ஏற்படும் மிக எளிமையான தெளிவான நோக்கு.

தீர்க்க முடியாத தொல்லைகளை கண் இமைப் பொழுதில் தீர்க்கும் வல்லமை நேர்மையான, நிதானமான மனப்போக்குக்கு என்றும் உண்டு.

நாம் முன்னர் கூறியது போல 2000 ஆண்டு சேகரித்து வைத்த பராக்கிரமத்தையும், பழம் பொருளையும். துட்ட கெமுனுவையும், எல்லாள மகாராஜாவையும் தேவை ஏற்படுமவரைக்கும் பூட்டி வைப்போம்.

இருபதாம் நூற்றூண்டில் பழைய மனிதனின் சாதனை இலங்கையை சிறிலங்கா வாக்கின தென்றுதான் கொள்ள வேண்டும்

எதிர் மறைச்சாதனைகள் மகாவலியோடு போட்டி போடும் இரத்த ஆறு.

பெயர் மாற்றத்தில் அதிக பலனிருப்பதாகத் தெரியவில்லை: இலங்கையை சிறிலங்காவென்றூலென்ன ஈழம் என்றூலென்ன, நாட்டில் வாழும் மக்கள் ''கனிபல்'' களாக வாழாது, மிருகத் தன்மை தலை தூக்காது மனிதப்பண்புள்ள மக்களாக வாழவேண்டும்.

பழங்கதையைப் புதுப்பிக்காது, இந்த நிலைக்கு நாம் 'எட்டமுடியவில்லை' யென்றும். இவ்வாறு வாழ்தல் எங்களுக்கு நிர்ப்பந்தம் ஆகிவிட்டதென்றும் கொள்ள வேண்டும்.

நெருப்புடன், பாம்புடன் பழகுவது ஆபத்து; அதே போல வரலாற்றுடன் சேட்டைவிடுவது வரம்பு கடந்த அழிவைத் தேடித் தரும்.

வளத்தில் வருகின்ற ஆட்சியாளர்களை நோக்குங்கால் எமக்கு சோர்வு அகன்று நம்பிக்கை பிறக்கிறது.

இந்தியாவுக்குச் சவால் விட்ட பிரதமர் பிரேமதாசா பற்றி நாம் என்றும் கவலைப்படவில்லை. நிதியமைச்சரும், பந்தோபஸ்து அமைச்சரும் அந்தணராக-இரு பிறப்பாளர்களாகக் காணப்படுகின்றனர்.

எவருக்கும், குறிப்பாகச் சிங்களப் பொதுமக்களுக்கு வியப்பளடயும் வண்ணம் நியாயம் விளக்குகின்றனர்.

நிதியமைச்சர் சாதாரண உண்மையை மிக அசாதாரண முறையில் விளக்குகின்றார். ஆறு கோடி தமிழ் மக்கள் உலகில் வாழ்கின்றனர்; அதிலும் ஐந்து கோடி அண்டை நாட்டில் வாழ்கின்றனர். ஒன்றரைக் கோடி சிங்கள மக்களாகிய நாம் என்ன செய்யமுடியும்?

இந்த உண்மை தமிழ் இளைஞரின் தீவிரவாதம் கற்பித்த புதுக் கண்டுபிடிப்பல்ல பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. பல்லாண்டு வாழ்க என்று நாம் வாழ்த்துகிறோம்.

அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டு பிடித்ததுபோல, தாங்கொணுத் துன்பங்களில் தெளிந்த உண்மை இது.

அதேபோல பாதுகாப்பு அமைச்சர் பட்டதெல்லாம் போதுமென்ற பல்லவிக்கு ''தமிழர்களைக் கொன்று கடலில தள்ள இந்த அரசாங்கம் தயார் இல்லை'' என்கிறார்.

நாட்டுக்கு ஆபத்தான காலத்தில் பௌத்த சங்கம் பாதுகாப்புக்குப் பொறுப்பென்ற கருத்து மீண்டும் எழுப்பப்பட்டது.

அந்தணர் அமைச்சர் லலித் அது ஒருபோதும் நடவாது, இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசு என்று தைரியமாகவும் திட்டவட்டமாகவும் பதிலளித்திருக்கிறார்.

'முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமோ' என்ற பழமொழிக்கு ஐ. தே. க. அரசு புறநடைபோல் தெரிகிறது.

## மின் இணைப்பு வசதி

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்குமுகப்பு வயல் கந்தசாமி கோவில் வீதிக்கு புதிய மின் இணைப்பு வசதி வழங்கப்படவுள்ளது.

இதற்காக இந்த வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டநிதியில் இருந்து 75-000 ரூபா ஒதுக்கிடுசெய்யப்பட்டுள்ளது.

15 லட்சம் ரூபா நிலுவை கட்டாவிடில்——————

# யாழ். மின்சார அபிவிருத்தி திட்டத்திற்கு ஒத்துழைப்பு இல்லை

## இலங்கை மின்சாரசபை அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். அபிவிருத்தி சபையின் 26 உப அலுவலகங்களும் உடனடியாக சுமார் 15 லட்சம் ரூபாவை மின்சாரசபைக்கு செலுத்தாவிடில் இவ்வாண்டில் செய்யப்பட இருக்கும் 100லட்சம் ரூபா பெறுமதியான மின் அபிவிருத்தித் திட்டவேலைகள் செய்வதற்கு தம்மால் ஒத்துழைப்புத் தரமுடியாதென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. எம் பஞ்சலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரண்டு வருடகாலமாக நாட்டு நிலைமை சீரில்லாமல் இருந்தமையினால் பல மின்வாடிக்கையாளர்கள் தமது மின்கட்டண நிலுவைகளை ஒழுக்காக உப அலுவலகங்களில் செலுத்தாமல் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் யா. அ. சபையின் 54 உப அலுவலகங்களில் மின் விநியோகம் உள்ள 26 உப அலுவலகங்களில் மின்பாவனையாளரால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் 1985 ஏப்பிரல் வரை 150 இலட்சம் ரூபாவரை உள்ளது. நிதி நெருக்கடி காரணமாக யாழ். அபிவிருத்திச்சபையால் மின்சாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா. 140 இலட்சம் செலுத்தாமையினால் மின்சாரசபை மின்துண்டிப்பு அறிவித்தல் அனுப்பியுள்ளது! எனவே கீழ்வரும் விடயங்களில் பொதுமக்கள் என்னுடன் ஒத்துழைத்து மின்துண்டிப்பு நடவடிக்கையைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களுடன்தொடர்புகொண்டு மின் நிலுவைகளைச் செவ்வை பார்த்து உடன் செலுத்தவும்.

டிரான்ஸ்போமர்களில் இருந்து மின்சாரம் பாவனையாளர்களுக்குச் சென்றடைவதற்கு முன்பு வழியிலேயே மின்சாரம் சட்டவிரோதமாகப் பாவிக்கப்படுவதனால் சட்ட விரோதமாகப் பாவிக்கும் மின் அலகுகள் முழுவதற்கும் உப அலுவலகமே மின்சாரசபைக்கு கொடுப்பனவு செய்யவேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் உப அலுவலகத்தின் செலவீனம் மிக அதிகரித்து மின்சாரசபைக் கொடுப்பனவைச் செய்யமுடியாமல் உள்ளது. எனவே சட்டவிரோத மின்பாவனையை உடன் நிறுத்தவும், புதிய ரான்ஸ்போமர்கள் பல இணைக்கப்பட உள்ளதினால் புதியமின் இணைப்புகள் உடனுக்குடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

உப அலுவலகங்களால் மின் சாரசபைக்குச் செலுத்தவேண்டிய நிலுவைகள் விரைவில் செலுத்தப்படாவிட்டால் இவ்வாண்டில் எம்மால் செய்யப்பட இருக்கும் 100 இலட்ச ரூபாய் பெறுமதியான மின் அவிருத்தித்திட்ட வேலைகளை செய்வதற்கு தம்மால் ஒத்துழைப்புத்தர முடியாதென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது".

(இலங்கை மின்சாரசபைக்கு கட்டவேண்டிய நிலுவை)

விபரங்கள் மே – 1985

| உப அலுவலகம் | நிலுவை | மாதம் |
|---|---|---|
| சங்கானை | 325, 252, 43 | 05 |
| கிளிநொச்சி | 1, 849. 237, 27 | 12 |
| புலோப்பளை | 65. 890, 85 | 05 |
| நெல்லியடி | 669. 512 78 | 05 |
| உடுப்பிட்டி | 314. 800, 00 | 04 |
| மயிலிட்டி | 747, 442, 62 | 05 |
| அச்சுவேலி | 175, 470, 00 | 04 |
| வட்டுக்கோட்டை | 652, 125, 93 | 07 |
| நீர்வேலி | 123, 315, 11 | 05 |
| நாரந்தனை | 71, 840, 28 | 04 |
| ஊர்காவற்றுறை | 100, 809.3 2 | 05 |
| ஏழாலை | 700, 000, 00 | 10 |
| உடுவில் | 685, 380, 58 | 04 |
| மல்லாகம் | 117. 000, 00 | 03 |
| கொக்குவில் | 1, 030, 891. 30 | 05 |
| மானிப்பாய் பட்டினம் | 872, 460, 47 | 09 |
| தெல்லிப்பழை | 514, 035, 37 | 06 |
| காரைநகர் வடக்கு | 132, 492, 75 | 03 |
| காங்கேசன்துறை | 980, 000, 00 | 07 |
| சுன்னாகம் | 799, 329. 40 | 05 |
| பண்டத். பட்டினம் | 700, 350 34 | 10 |
| சுழிபுரம் | 290. 712, 04 | 12 |
| நல்லூர் | 671, 037. 72 | 05 |
| உரும்பிராய் | 600, 000, 00 | 05 |
| மானிப்பாய் கிராமம் | 480, 000. 00 | 03 |
| கோப்பாய் | 464, 000, 00 | 04 |

## மக்கள் கருத்து

### நாவலர் சிலை

ஐந்தாம் குரவராக கருதப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலையை நல்லூர் இரண்டாம் வீதியால் ஒதுக்கப்பட்டால் எல்லா ஆலயங்களிலுமுள்ள சமயகுரவர் சந்தான குரவர் ஆழ்வார்கள் முதலாம் வீதியால் அகற்றப்பட வேண்டும்.

நல்லூர் நாவலர் என்று புலவர்கள் பாடினார். அவருக்குப் பதிலாக யாரை நல்லூரில் கட்டுவது?

ஐ. ஐ. லக்ஷ்மி நாராயண சுவாமிஜி.

# ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கியம்பெற்ற ஆடி மாதம்!

ஆடிமாதம் ஈழத் தமிழ் மக்கள் வரலாற்றில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது?

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆகஸ்ட் மாதம் முக்கியத்துவம் பெற்றது. ஆகஸ்ட் பதினைந்தாம் திகதி தான் இந்தியா சுதந்திரம் பெற்றது. விடுதலைப் போராட்ட வீரர்கள் இன்றும் ஆகஸ்ட் தியாகிகள் என்று அழைக்கப் படுகிறார்கள்.

ஆனி மாதம் இலங்கைத் தமிழர் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. 1956-ம் ஆண்டு ஆனி ஐந்தில்தான் சிங்களம் மட்டும் மசோதா எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொண்டுவந்தார். அன்றுதான் காலிமுகத்திடலில் அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்த தமிழ்த் தலைவர்கள் காடையர்களால் தாக்கப்பட்டனர்.

1956-ம் ஆண்டு ஆனிமாதத்தில் தான் முதல் தடவையாக சிங்கள—தமிழ் இனக்கலவரம் இங்கினியாகல அம்பாறைப் பகுதியில் தலைதூக்கியது. இங்கினியாகல, அம்பாறையில் குடியேறிய தமிழ் மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்கா ஆட்சியில் ஆனிமாதம் பெற்ற முக்கியத்துவம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே. ஆர், ஆட்சியில் ஆடி மாதம் அதிக முக்கியத்துவம் பெற்று வரலாற்றில் இடம் பெற்றுவிட்டது.

### எஸ். எம். ஜி.

பயங்கரவாதத்தை வட பகுதியிலிருந்து அடியோடு ஒழிப்பதற்கு காலக்கெடு விதித்து [1979-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்பாக] ஜனாதிபதி ஆணை பிறப்பித்து பிரிகேடியர் வீரதுங்காவை

(5-ம் பக்கம் பார்க்க)

## உபய கதிர்காம முருகன் பவனி

ஊராரறிய உலகெலாமறிய நாம்
ஓயாதுனையே தஞ்சமெனவே ஓயா
தோடிவந்தாறி உனதடி தொழுதோம்
உபயகதிர்காமத் தொப்பிலாவப்பா!

தீராவினையைத் தீர்த்தருளழகா!
தீந்தமிழ்த் தெய்வமே தேவயானை
திகழுநல்வள்ளி திருவுடைப்பதியே!
தென்னகமா தெமக்களித்த

ஆராவமுதே அருட்பெருஞ்சோதி!
ஆலவாயண்ண லெமக்களித்த
ஆறுமுகமுடைப் பிரானே
அடைக்கலம் அடைக்கலம்

பேராயிரமுடையான் ஊரிலான் பேரிலான்
பிரான்னுமை ந(ா)டு மெஞ்ஞானகுருவே
பேணிகின்றன் தாள் தொழுதனம்
பேதையெ மங்களைக் காத்தருளாயே!

— பொற்பதியான்

[தென்புலோலி உபய கதிர்காம ஆலய இரதோற்சவம் இன்று]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

வேலணை கிழக்கில் நடத்தப்படும் நண்பர்களுக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டின் 2-வது சீட்டிழுப்பின் போது (30-7-1983) நல்லூர் கச்சேரி வீதியைச் சேர்ந்த நடராசா என்பவர் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்பட்டு ரூபா ஆயிரம் வழங்கப்பட்டது.

M. துரைராசா.

[4789]



## பெண்களுக்கான புதிய மனையியல் வகுப்புகள்

ஆரம்பம்: 2-8-85 காலை 9-00 மணி

தையல்கலை. பூவேலை, கேக்ஐசிங், கோலம்போடுதல், CANDY GRAFT, பொம்மைவேலைகள், HAIR STYLE, FABRIC and GLASS. PAINTING, சமையல் கலை, FIRST AID. ENGLISH LANGUAGE, விஞ்ஞான ரீதியிலான இவ் வகுப்புகள் காலை, மாலை நடைபெறும். தனிப்பட்ட பிரத்தியேக சனி, ஞாயிறு வகுப்புகளும் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:-

### வின்னின்லேடிஸ் அக்கடமி

61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

[4779]



★ கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள்
பூங்காவனத்திருவிழா இன்று

### லலிதாம்பிகையே சரணம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவஎன் றடியவர் குழும
அவரருள் பெறஅரு ளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

அன்னையின் அருள் உலகமெலாம் பரவட்டும்

தரமான தங்க நகைகளுக்கு

### நித்திய கல்யாணி ஜுவல்லறி

162, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

[4791]



★ கன்னாதிட்டி அருள்மிகு காளிஅம்பாள்
பூங்காவனத்திருவிழா இன்று

### மாதா ஜெயம் ஓம் லலிதாம்பிகையே

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையா னவளே
பூணக் கிடையாப் பொலிவா னவளே
புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநா மமும்நின் துதியும்
நவிலா தவரை நாடா தவளே
மாணிக்க ஒளிக் கதிரே வருவாய்
மாதா ஜெயஓம் லலிதாம் பிகையே.

★ அன்னையின் மகோற்சவம் இனிது நிறை
வெய்த அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்.

### யப்பான் ஜுவலர்ஸ்

(க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்)
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22518



# HOME FINANCE LTD.

4-8-85 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம்

இரவு உல்லாச பஸ் சேவை

கட்டணம் 75/- மட்டும்

ரிக்கற் பெற்றுக்கொள்ளுமிடங்கள்.

**ஹோம் பினான்ஸ் லிமிட்டட்,**
82, கன்னாதிட்டி வீதி போன்: 24310

**நியூ லங்கா அலுமினியம் இன்டறீஸ்,**
6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**அன்னராஜா ஸ்ரோர்ஸ்,**
158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22608


## அடுத்த மாதம் 6ம் திகதி மரணவிசாரணை

[யாழ்ப்பாணம்]

காரைநகர் பஸ்தரிப்பில் பலியான மூவரின் மரண விசாரணை அடுத்தமாதம் 6ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் இவ்விசாரணை எடுக்கப்பட்டு, சட்டவைத்திய அதிகாரிவராததினால், பின்போடப்பட்டது.

## ஈழத்தமிழர்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் அனுப்பிவைத்தது ஆடி மாதத்தில் தான்!

1979-ம் ஆண்டு ஜூலை மாதம் பதின்மூன்றும் திகதி நள்ளிரவில்தான் இன்பம், செல்வம், பாலேந்திரா, ராஜேஸ்வரன், பரமேஸ்வரன் இந்துராசா ஆகியோர் சித்திரவதைக்குள்ளாகிப் படுகொலை செய்யப்பட்டனர்,

இன்பம, செல்வம், இந்துராசா மரணங்கள் படுகொலையென மரணவிசாரணையில் தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றவாளிகள் இன்றுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்த மரணங்கள் பற்றி விசாரிப்பதற்கென பாராளுமன்றத்தில் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக் குழுவுக்குத் தலைவராக அமைச்சர் அத்துலத்முதலி நயமிக்கப்பட்டார். பலன் பூஜ்யமே!

அரசியல் அதிகாரப் பரவலாக்குவதற்கு மாவட்ட சபைகள் அமைப்பது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தது 1979 ம் ஆண்டு ஆடி மாதத்தில் தான்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலையொட்டி 1981-ம் ஆண்டு மே மாதம் 31-ந் தேதியும், ஜூன் மாதம் 1-ந் தேதியும் யாழ்ப்பாணத்தில் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. படுகொலைகளும் தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன. யாழ். பொது நூலகம் தீக்கிரையானது; 'ஈழநாடு' வெந்து சாம்பரானது.

1983-ம் ஆண்டு ஆடி இருபத்திமூன்றும் தேதிதான் திருநெல்வேலியில் கண்ணிவெடிக்கு பதின்மூன்று இராணுவத்தினர் பலியானார்கள். மறுநாள் இருபத்திநான்காம் தேதி திருநெல்வேலிப் பகுதியிலும் மற்றும் இடங்களிலும் படுகொலைகள் இடம்பெற்றன. வீட்டுக்குள்ளிருந்தவர்கள் தட்டி எழுப்பிச் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

1983- ஆடி இருபத்திநான்காம் தேதி நாடெங்கிலும் இனக்கலவரம் தலையெடுத்தது. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; சொத்துக்கள் சூறையாடப்பட்டன; எங்கும் தீச்சுவாலை!

1983-ஆடி 24, 25ம் தேதிகளிலேதான் வெலிக்கடைச் சிறைச்சாலையில் ''பாதுகாப்பிலிருந்த'' ஐம்பத்திரெண்டு தமிழ்க் கைதிகள் மிகக்கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டனர். இன்று ஈழத் தமிழர் சுதந்திர வரலாற்றில் நிரந்தரஇடம் பெற்றுவிட்டனர்.

ஆடி மாதம் ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது


இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு

**றேயல்**

கஸ்ராட் பவுடர

சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்


## மன்சூர் சேவைக்கு பாராட்டு

(பச்சிலைப்பள்ளி நிருபர் ஏ. சி. அரியகுமார்)

''கிளிநொச்சி மாவட்டம் கல்வித்துறையில் மன்சூரின் தலைமையில் முன்னேறி வருகிறது. அதற்குச் சான்றாக இம்முறை கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பல்கலைக் கழகம் வரும் வாய்ப்புக்கிடைத்துள்ளது''. என்று யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினார்.

முல்லைத்தீவு - கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூரின் சேவையைப் பாராட்டி கிளிநொச்சி மாவட்ட பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரால் பாராட்டு விழா நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் தலைமை தாங்கினார்.

பளை மகா வித்தியாலய அதிபர் திரு ஏ. பி. செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடர்ந்து உரையாற்றும் போது, 'வட பகுதி மக்கள் தமது செல்வமாகக் கல்வியைப் பேணவேண்டும் எனவே சகல பாடசாலைகளின் தரமும் குறையாது பேணப்படல் வேண்டும். இஸ்லாமியர்களும் தமிழைப்பேணி வளர்த்து வந்துள்ளார்கள். இஸ்லாம் மதம் போதிக்கும் சகோதரத்துவத்தை முறைப்படி பேணி-வருபவர் மன்சூர் ஆவார்'' என்றார்.

கல்விச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு கே ஜெயக்குமார் உரையாற்றுகையில், 'மன்சூர் கல்வித்துறையில் பல பதவிகளை வகித்து உயர்ந்துள்ளார். சுறுசுறுப்பு ஆகியவற்றினால் கல்வி அமைச்சு அவருக்கு பதவி உயர்வினை வழங்க நேரிடும்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிக்க வேண்டி நேரிடுமோ எனப் பயப்பிட வேண்டியுள்ளது என்றார்.

(8-ம் பக்கம் பார்க்க)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி புனிதராணி - ஜோர்ஜ் - பெனடிக்ற்



மலர்வு: 15-6-1954

உதிர்வு: 02-07-1985

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் குடும்பத்தின் மணிவிளக்காய் விளங்கிய ஒளிவிளக்கே, எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் புரிந்த உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அன்புக் கணவர், சகோதர சகோதரிகள்,
உறவினர்கள்.

நவாலி தெற்கு, மானிப்பாய். 4794



## வெற்றிடங்கள்

பொருத்துனர் ஒட்டுனர் கொல்லர்
தகர வேலையாளர்
(FITTERS, WELDERS, BLACKSMITHS, SHEET METAL WORKERS)

மேற்கண்ட வேலைகளில் சேர விரும்புவோர்
1-ந் திகதி வியாழக்கிழமை எமது அலுவலகத்திற்கு நேரில் வரவும்
முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

### டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்.

476, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)



## பதவி வெற்றிடங்கள்

உரும்பராயில் விரைவில் திறக்கப்பட இருக்கும் மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றில் பின்வரும் பதவிகளுக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன: அனுபவம் வாய்ந்தவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

வைத்திய கலாநிதி எம்.பி.பி.எஸ். (M.B.B.S.)
பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உதவியாளர் (R. M. P.)
அனுபவம்வாய்ந்த பயிற்றப்பட்ட தாதியர்,
மருந்து கட்டுபவர்.
சத்திர சிகிச்சை அறிவுள்ள ஆண் அற்றன்ரன்
வயது: 45 வயதிற்குள்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
முழு விபரங்களுடன் 12-08-85க்குமுன் இரு பிரமுகர்களின் அத்தாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும்.

விலாசம்: வி கே. ரவீந்திரஜோதி,
''வெண்ணிலா'', பலாலி வீதி, உரும்பிராய்.

இன வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை. 4750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புதிய வெளியீடுகள்

அன்பின் முகவரி V. G. P. (Original)
மோகன், விஜி, சசிகலா, கவுண்டமணி

வாங்க மாப்பிள்ளை வாங்க Vanee
சிவசங்கர், தேவிஸ்ரீ

அலை ஓசை V. G. P. (Original)
விஜயகாந்த், நளினி, கவுண்டமணி

அமுத கானம்
விஜயகாந்த், நளினி, பேபி ஷாலினி

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் வீடியோ சென்ரர்**
முத்திரைச்சந்தை — நல்லூர்
4784



## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

**86** சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 3-8-85
காலை 11-00 மணி.

**A/L DAY CLASSES**

ஆரம்பம்: 5-8-85 காலை 8-00 மணி

குறிப்பு: ஒரு வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறத்தக்கதாக போதிக்கப்படும்.
4767


## உருக்கமான வேண்டுகோள்

### மீண்டும் மீண்டும் ஏனிந்த வதை?

கமத்தொழிலையே நம்பி வாழும் விவசாயியான எனது MASSEY FERGUSON உழவுயந்திரத்தை (37 ஸ்ரீ 14) ஏப்ரல் 19 ம் தேதி இனந்தெரியாத யாரோ எடுத்துச் சென்றனர் சில மணித்தியாலங்களில் திருப்பித்தருவதாகச் சொன்னபோதிலும் இதுவரை தரவில்லை இதுபற்றி 14-7-85 பத்திரிகையில் ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

ஆனால் நடந்ததென்ன? மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல், எனது வீடு உடைக்கப்பட்டு இரும்புப்பெட்டி, 1 1/2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், காணி உறுதிகள், ஆயுட் காப்புறுதிப்பத்திரம் ஆகியன கொள்ளை அடித்துச்செல்லப்பட்டன.

மீண்டும் மீண்டும் ஏனிந்த இன்னல்? ஏனிந்தத் தண்டனை? யாராவது பதில் சொல்வார்களா? யாராவது உதவுவார்களா? சம்பந்தப்பட்டவர்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன்

த. சோமசுந்தரம்,
3–ம் வாய்க்கால், பரந்தன்.

## இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—17(1-08-1985)
வியாழக்கிழமை
திதி—பிரதமை பி: இ:வரை
நக்ஷத்திரம்— திருவோணம் மு. இ.வரை

மேடம்:- தாய்வழியால் சஞ்சலமான செய்திக்கு இடம் உண்டு எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்து உருவாகும். அவதானம் நன்று.

இடபம்:- புத்திரவழியால் போற்றத்தக்க முன்னேற்றம் உண்டு. செய்தொழிலாலும் சிறப்புண்டு விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு.

மிதுனம்:- பேச்சுவார்த்தையின் மூலம் பிளவுகள் தோன்றும் ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும்.

கடகம்:- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும் பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் புதினத்திற்கும் இடமுண்டு.

சிங்கம்:- பாதையில் பழுதுண்டு பகைவர்கள் பதுங்குவர் போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

கன்னி;- மதிவழி நடப்பின் மற்றவர் பொறுமை படுமளவிற்கு முன்னேற்றம் உண்டு. பிதாவழிச்சுகமும் உண்டு.

துலாம்:- வணிகர்களுக்கு சிறப்பானதினம்புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும் நல்வரவும் உண்டு.

விருச்சிகம்:- இலாபகரமான வரவுக்கும் இடமுண்டு சுப காரியங்கள் மேற்கொள்ள உகந்ததினம் திடீர்பிரயாணமும் ஏற்படலாம்.

தனுசு:- வீண் பழிக்கு ஆளாக நேரும். இன்று தொழில் பொருள் இவைகளில் கவனம் வேண்டும். விழிப்புடன் செயலாற்றவும்.

மகரம்:- உடல் நிலையில் சோர்வு தோன்றும் உழைப்பினால் முன்னேற்றம் குன்றும். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.


கும்பம்:- எதிர்பார்த்த வேதனம் தடைப்படலாம் எண்ணத்திலும் மாறுதல் உண்டு நண்பர்கள் மூலம் வரவுக்கு இடமுண்டு

மீனம்:- முன்னேற்றத்திலும் முட்டுக்கட்டை தோன்றும் எண்ணியதும் தடைப்படும் சகோதரவழிச்சுகமுண்டு.

திருமலை
வே ரவீந்திரன்

## இப்படியும் நடக்கிறது

### லேட்டஸ்ட்... விடுதலைக்காளி!



புதுமையான கருத்துப் புரட்சி இது!
''ஊடுருவி''

## தாமதம்

(யாழ்ப்பாணம்)

'ரோலர்கள்' பழுதடைந்துள்ளதால், வீதி திருத்த வேலைகள் தாமதிக்கப்பட்டு வருகிறது.

சுமார் எட்டு மாதத்திற்கு மேலாக ரோலர்கள் ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டிருந்ததினால், சில உதிரிப்பாகங்கள் பழுதடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் பிரதான வீதிகளில், திருத்தவேலைகள் தடைப்பட்டுள்ளன. (க)


இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
**ரேயல்**
ஜெலி கிறிஸ்டல்ஸ்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு -13.



## காணி விற்பனைக்கு

1. யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கு பெற்ரோல் நிலையத்திற்கு அண்மையாக கிணற்றுடன் நிலப்பரப்பு 27 செய்கைக்காணி.
2. யாழ். கொழும்புத்துறை தண்டி வீதியாக நெற்பரப்பு 7.

வட்டி விகிதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்று மாதம் | 18% | தொடக்கம் | 20% | வரை |
| ஆறு மாதம் | 21% | தொடக்கம் | 23% | வரை |
| ஒரு வருடம் | 22% | தொடக்கம் | 25% | வரை |

விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD,
3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698



வெளிநாடு செல்வோர்க்குக் கைகொடுக்கிறது

## MACK TRAVELS

பொதுமக்களின் நம்பிக்கையையும், அபிமானத்தையும் ஏற்கனவே பெற்றுக்கொண்ட

பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

உலகின் எப்பகுதிக்கும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் விமானச் சீட்டுக்கள் பெறலாம்.

CONFIRMATIONS RE-CONFIRMATION, CANCELLATION போன்ற பணிகள் யாவற்றையும் நாம் கவனிப்போம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், (ALTERATION, RENEWALS; BONDING) ஆகியவற்றுக்கான எல்லா ஒழுங்குகளும் யாழ்ப்பாணத்திலேயே செய்து தரப்படும்

MACK TRAVELS தரும் பரிசு நிம்மதியான பயணம்

**MACK TRAVELS**
இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791 Residence: 24474

Dyn. Ads


## முதலாவது நினைவஞ்சலி

செல்வன் நா. மோகனராஜா
(கொழும்பான்)

மலர்வு:-
26-07-1964

உதிர்வு:-
12-08-1984

திதி:-
01-08-1985



வளர்மதிபோல் வையத்து மாண்புடன்
வாழ்ந்த நேரம் சதி வலையில் சிக்கியே
நீ பரமன் தாள் சேர்ந்தாய்.

உனது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

நாகலிங்கம் (அரசாங்க அச்சகம்) தங்கரத்தினம் (பெற்றோர்), சுசிலாதேவி, தேவராசா (சுவிற்சலாந்து), சாந்தினிதேவி (ஜேர்மனி), ரஞ்சனி தேவி, விஜேதினிதேவி (சகோதரர்கள்), சுஜீதா, ரபீதா (மருமக்கள்), உறவினர், நண்பர்கள்.

ஏழு கிழக்கு, சுன்னாகம். (4754)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
**Escort Girls**
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**மொடேர்ண் மினி சினிமா**
தினசரி 10-30, 12-30
2-30, 4-45, 6-45 மட்டும்
**BURNING PASSIONS**
வயது வந்தவர்கள் மட்டும்
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)

**குமரன் மினி சினிமா**
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
**Ten to Midnight**
(Adults Only)

**வின்ஸர்** (யாழ்.)
Daily 10-30, 2-00, 4-30, 7-00
**CAT PEOPLE**
ஒரு பெண் சிறுத்தையாக மாறி கோரக் கொலைகள் புரியும் பயங்கரக் காட்சிகள். திகில், மர்மங்கள் நிறைந்த விறுவிறுப்பான வர்ண ஓவியம். (புதிய வெளியீடு) வயது வந்தவர்கட்கு மட்டும்.

**லிபேர்ட்டி மினி**
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30, 12-30, 2-30, 4-45, 7-00
**I spit on your Grave**
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கொடூரமானமுறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

**வெலிங்டன்**
10-30, 2-15, 4-30, 6-45, 9-00.
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
**Shaolin Temple**
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்)
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்)

**லிடோ சினிமா**
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
**நீங்கள் கேட்டவை**
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

**"லதா" மினி**
(கோண்டாவில்)
ரஜனிகாந் - ராதா நம்பியார்
**நான் மகான் அல்ல**
10-30, 3-30, 6-45
(வயது வந்தவர்களுக்கு ஏற்றது)

**பாலகன் V.V.**
(சாந்தி முன்பாக)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
**LONE WOLF MCQUADE**
ஒரு தனிமனிதன் நவீன ஆயுதங்களுடன் ஓர் பெரிய கூட்டத்தை எதிர்த்து போராடும் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
(வயது வந்தோர் மட்டும்)

**தேவி மினி சினிமா**
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30, 6-30,
**நீதியின் நிழல்**
சிவாஜி, பிரபு, ராதா, சந்திரசேகர், சுரேஸ்
(புதிய வெளியீடு)


**ஹரன் சினிமா**
10-30, 2-30
ஜெய்சங்கர்—பானுமதி
**மேஜர் மீனாட்சி**
(புதியபிரதி கலர்)

**ஹரன் மினி**
10-30, 2-30, 4-30, 6-30
**Warrior of The Lost World**
பயங்கர தாக்குதல், சண்டைகள் நிறைந்த படம்

**சரவணபவன் மினி சினிமா**
**விக்கிரமாதித்தன்**
M. G. R. பத்மினி

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
WENG WENG
**Impossible Kid**
(Color)
A full action karate
முழு நீள கராட்டி சண்டைகள் நிறைந்தது.

SIVA PRODUCT
இழந்த சக்தியை மீண்டும் பெற டாக்டர்கள் சிபாரிசு செய்வது உயிர்சக்தி நிறைந்த
**ரோயல் குளுகோஸ் டீ**
இறக்குமதி செய்து அடைத்து வினியோகிப்போர்,
சிவா இன்டஸ்ட்ரீஸ்
22-1/1, ஆதம்லி பில்டிங் ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு - 13
தொலைபேசி, 26679




ரோயல் குளுகோஸ் ... அரச உணவு மருந்துச் சட்டத்தின்படி உத்தரவாதப்படுத்தப்பட்டது.

## அறுவடை விழா

(புலோலி)

புலோலி விவசாயப்போதனாசிரியர் நிலையப்பகுதியில் இன்று 1-ம் திகதி உரப்பசளை பரிசோதனைத்துண்ட அறுவடைவிழா நடைபெறவுள்ளது.

புலோலி விவசாயப்போதனாசிரியர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரப்பசளைபரிசோதனைத்துண்ட அறுவடை விழா வில்யாழ். மாவட்ட உதவிவிவசாயப்பணிப்பாளர் திரு எஸ். கிருஷ்ணபிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

சோளங்கனிலுள்ள எஸ். தெய்வமணி என்பவரின்தோட்டத்தில் நடைபெறவுள்ள அறுவடைவிழாவுக்கான சகல ஒழுங்குகளையும் கரணவாய் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் திரு. எம். கணபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

**மேபெயர் மினி**
(கன்னாதிட்டி)
10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.—லதா
**நேற்று இன்று நாளை**

**நியூ சாந்தி மினி**
10-30, 2-30, 6-30
சிவாஜி— பத்மினி
**தில்லானா மோகனாம்பாள்**
புதிய வண்ணப் பிரதி

**நியூ சினிமாலயா**
R.G. பில்டிங் மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
5X5 திரையில்
10-30, 2-30, 4-30, 6-30,
**FANTASM COMESAGAIN**
(Adults only)


**கஜேன் மினி சினிமா**
(சத்திரச் சந்தி அருகாமையில்)
10 30, 2.30, 4.30, 6.30
**EAGLE ATTACK AT DOWN**
இராணுவத்தின் அட்டூழியங்களை தாங்க முடியாமல் சிறையில் இருந்து தப்பிய இளைஞர்கள் நவீன ஆயுதங்களுடன் சிறைச்சாலையைத் தாக்குதல் நிறைந்த படம்.
அடுத்தபடம்
**விவசாயி**

**உஷா மினி**
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-30
இன்றைய இளைஞர்களுக்கு
**Under Fire**
நிக்கரக்குவாவில் இராணுவத்தினரின் அட்டூழியங்கள்-எதிராகக் கிளர்ந்தெழும் மக்கள் ஊர்வலங்கள் - நேரில் துணிச்சலுடன் படம் பிடிக்கும் வெளிநாட்டு பத்திரிகை நிருபர் - நாட்டுக்காகப் போராடும் விடுதலைக் கெரில்லாக்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி
### திருமதி பரமேஸ்வரி தாமோதரம்பிள்ளை

அன்னை மடியில்:
05-01-1928

ஆண்டவன் அடியில்:
02-07-1985



எங்கள் குடும்ப விளக்காய் ஒளி வீசி நின்று எம்மையெல்லாம் கண் இமை போல் காத்துவந்த எம் அன்புத் தெய்வமே எங்களுக்கு புத்திமதிசொல்லும் மந்திரியே உங்கள் அன்பும், பண்பும், பாசமும், உருவமும் எங்கள் கண்முன் நிழல் ஆடுகின்றது. எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி இறைவன் அடி சேர்ந்த எம் அன்புத் தெய்வத்தின் உடல் அக்கினியுடன் சேர்ந்து 31 நாள் நினைவை எண்ணி கண்ணீர் வடிக்கின்றோம் கலங்குகின்றோம் மீண்டும் எமக்கு வழிகாட்ட வரமாட்டாயா என ஏங்குகின்றோம் ஐயா உங்கள் உடல் மறைந்துஉயிர் ஆவியானது மட்டும் உண்மை. ஆனால் எங்கள் நினைவில் இருந்து ஒரு அணுவேனும் மறையவில்லை. உங்கள் பிரிவு எங்கள் குடும்பத்தையும், அன்பு சகோதரிகளையும், மைத்துனர்களையும், பெருமக்களையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டது. உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியும் தந்திமூலமும், கடிதமூலமும் எமது துன்பங்களில் பங்குபற்றி பல வகையில் உதவி செய்து ஆறுதல் மொழி கூறிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


உங்கள் பிரிவால் வாடும்
அன்புக் கணவன், பிள்ளைகள், தாயார்,
பேரப்பிள்ளை, சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமகன், மருமக்கள், பெருமக்கள்.
பழைய விதானை வீடு, துன்னாலை வடக்கு.
கரவெட்டி. [4776]

## ஓராண்டு நினைவஞ்சலி
### திரு. வேலாயுதர் மகேஸ்வரன்

ஆசிரியர், பண்ணாகம்

தோற்றம்:
12—4—1925

மறைவு:
12—8—1984



என்றென்றும் எம் மனதில் நீங்காத
குன்றத்து குலவிளக்கே! குலத்தரசே! ஐயா
சென்றெங்கள் துயர் தீராது
நின்று இங்கு ஏங்குகின்றோம்
அன்புகொண்ட மனைவி மக்கள்
ஆற்றொணாத் துயர் தரிக்க
அரவணைத்த நின் அண்ணர்
ஆவி பரிதவிக்க
எம்மைவிட்டு மறைந்துவிட்ட
மரகதமே அப்பா!
சிவனடியில் தாம் சென்று மறைந்து
விட்டதோர் ஆண்டு
எழில்கொண்ட நின் தோற்றம்
தெரியுதையா! எம்மனதில் புதிதாக;
தங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்.
பண்ணாகம், சுழிபுரம்,
1-8-1985. (4668)

## எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்

THE EXPRESS INSTITUTE
கோப்பாய் வடக்கு கிளை நிறுவனத்தில்
O/L DEC. 85 துரித மீட்டல் வகுப்பு
**ஆகஸ்ட் 5ல் ஆரம்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# பொலிஸ் பாதுகாப்பிலிருந்த இந்திய மீனவரின் வள்ளம் தீக்கிரை;

# நஷ்டஈடு வழங்கவேண்டும்!

## யாழ். மேல்நீதிமன்றத்தில் சட்டத்தரணி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்றொழிலாளர் பொன்னுண்டி கணேசனின் வள்ளம் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த போது எரிந்து சேதமாக்கப்பட்டு விட்டதால், அதற்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று கோரி யாழ் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதவான் எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1984-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் தேதி கடலில் வைத்து பொன்னுண்டி கணேசன் வள்ளத்துடன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். விசாரணை பின்பின் அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்

அவரின் வள்ளத்தைத் தடுத்து நீதிமன்றப் பொறுப்பில் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

1985 பெப்ரவரி 6ம் தேதி எவ்வித குற்றச்சாட்டுப் பத்திரமும் தாக்கல் செய்யப்படாமலே பொன்னுண்டி கணேசன் விடுதலை செய்யப்பட்டதுடன் வள்ளத்தையும் அவரிடம் திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சந்தேகநபர் சார்பில், இந்திய ஸ்தானிகரின் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் ஆஜராகி, வள்ளம் ஓட முடியாதநிலையில் இருப்பதால் அதனைப்பழுதுபார்த்து ஒப்படைக்குமாறு நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, வள்ளத்தைப் பழுதுபார்க்குமாறு மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கு உத்தரவிடப்பட்டது

யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதவான் எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில், கடந்த தவணையின் போது இவ்வழக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றக் கட்டளையை அமுல் நடத்த முடியாதிருப்பதாகவும், பொலிஸ் பாதுகாப்பில் இருந்த வள்ளம், எரித்து சேதப்படுத்தப்பட்டு விட்டதாகவும் மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் வழங்கிய கடிதத்தை, அரச சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா சமர்ப்பித்தார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம், இந்த வள்ளம் மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகத்தரினாலேயே 1,20,750 ரூபா என மதிப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வள்ளத்தை திருப்பி ஒப்படைக்க முடியாவிட்டால் அதன் பெறுமதியை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இவ்விபரத்தை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு அரச சட்டத்தரணியை பணித்த நீதிபதி மேல் விசாரணையை ஆகஸ்ட் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (க

## ரூ. 70,000 நஷ்டஈடு வழங்க நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ட்ராக்டர் மோதி மரணமான ஒருவரின் குடும்பத்துக்கு 70ஆயிரம் ரூபா நஷ்டஈடுவழங்குமாறு ட்ராக்டர் ஓட்டியவர்களுக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

1981 பெப்ரவரி மாதம் 2ம் திகதி வல்லிபுரம் பரமு, வல்லிபுரம் சபாதீஸ்வரன் ஆகிய இருவரும் உழவு இயந்திரத்தை கவனயீனமாகச்செலுத்தி பூநகரியைச் சேர்ந்த நடராசா சேதுராசா என்பவருக்கு பலத்தகாயத்தை உண்டாக்கி மரணம் ஏற்படுத்தியதையிட்டு நஷ்டஈடுக்கோரி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் மரணமானவரின் மனைவி மகேஸ்வரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எதிராளிகள் தரப்பில் சட்டத்தரணி விஜயசேகராவும், வழக்காளிகள் தரப்பில் சிவநாகராசாவும், திருமதி அம்பிகைபாலனும் ஆஜரானார்கள். நீதிமன்றத்தில் நஷ்டஈட்டு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இறந்த சேதுராசாவின் மனைவி மகேஸ்வரிக்கும் அவர்களது பிள்ளைகளான சிறீதரன் கிருமாலினி ஆகியோருக்கும் 70 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (மா)

## லொறி கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஐந்து லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியுள்ள 'உழவு யந்திர உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த லொறி இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் இச்சம்பவம் நடைபெற்றது.

கொழும்பைச் சேர்ந்த ஏ டபிள்யு எம். பாயஸுக்குச் சொந்தமான லொறியென்றும், ஐ. எல். சனூர்தீன் என்பவர் வடபகுதிக்கு வியாபார நோக்கமாக அந்த லொறியில் ட்ராக்டர் உதிரிப்பாகங்களை ஏற்றிக்கொண்டு வந்தபொழுது சாவகச்சேரியில் வைத்துக் கடத்தப்பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (யா)

## பரந்தன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் பரந்தன்பகுதிக் கடைகள் உடனடியாகப் பூட்டப்பட்டன.

கொழும்பிலிருந்து புகையிரத மூலம் ஆனையிறவு இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்படவிருந்த வெற்று டாங்கிகளை துப்பாக்கி இளைஞர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

சில டாங்கிகள் புகையிரத நிலையத்தில் வைத்தே குண்டு வைத்துத் தகர்க்கபபட்டதாகவும் ஏனையவை பரந்தனில் சேதப்படுத்தப்பட்ட நிலையில் கிடந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சஞ்சிகை வெளியீடு

(கல்வியங்காடு)

அறிவாளி என்னும் பெயருடைய புதியவார ஏடு ஒன்று அரியாலையில் இருந்து இன்று வெளிவருகிறது.

கலை, இலக்கிய செய்திகளை உள்ளடக்கியதான இப்பத்திரிகை வெளியீட்டுவிழா இன்று மாலை அரியாலை மேற்குகாந்தி சனசமூகநிலைய கலையரங்கத்தில் நடைபெறும். யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பலர் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள்.

## மன்சூர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு' யாழ்ப்பாணம், வவனியா கல்வி மாவட்ட வட்டாரக் கல்வி அதிகாரிகள், மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் விழாவில் கலந்து கொண்டார்கள்.

பார்வையாளர் வரிசையில், கிறிஸ்தவ, பௌத்த மதகுருமாரும் காணப்பட்டார்கள். கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. வணசிங்கா விழாவினைப் பாராட்டி தந்தியினை அனுப்பி வைத்திருந்தார்.

## ராஜீவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் கொலை இந்திரா காங்கிரஸ் கட்சியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவரது மனைவி திருமதி லலித் மாக்கன் ஆந்திரப்பிரதேச ஆளுநர் திரு. சங்கர் தயாள் சர்மாவின் புதல்வியாவர்.

## கடத்தப்பட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று அறிவிக்கப்படாததால் பெற்றோர் பீதியும் அதிர்ச்சியும், கவலையுமடைந்து ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

இதுசம்பந்தமாக இரு அரசாங்க நில அளவையாளர்களினதும் பெற்றோர் உயர்அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு [illegible] தெரிவித்துள்ளனர்.

## "என் கணவனை 7 இளைஞர்கள் விசாரணைக்கு கூட்டிச் சென்றனர்"

### மரணவிசாரணையில் மனைவி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"வெள்ளைவான் ஒன்றில் துப்பாக்கியுடன் வந்த 7 இளைஞர்கள் விசாரணைக்கு எனக்கூறி என் கணவனைக் கூட்டிச் சென்றனர். பின் கணவனுக்கு மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்டதாக அறிந்தேன்"

யாழ் பஸ் நிலையத்தில் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பொன்னையா தெய்வேந்திரம் அல்லது தீசனின் [27 வயது] மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவி தயாரதி [23 வயது] மேற்கண்டவாறு கூறினார்,

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

தயாரதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: என் இளைய சகோதரி மீனாட்சி எங்களுடன் வசித்துவந்தார். அவர் திருமணமாகாதவர். 85ஜூன் 14ந் தேதி என் தங்கைக்குக்கு வயிற்றுக் குற்று ஏற்பட்டது. யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றபோது அங்கு ஒரு பெண்குழந்தையைப் பிரசவித்தார். அக்குழந்தை பின் இறந்துவிட்டதென்று அவர் கூறினர் தங்கைக்கு கைகால் வலிப்பு ஏற்பட்டது ஆஸ்பத்திரிக்குவர மறுத்துவிட்டார். 85 ஜூலை 29ம் தேதி அவர் இறந்துவிட்டார். அன்றிரவு 9 மணிக்கு வெள்ளை வான் ஒன்றில் வந்த 7 இளைஞர்கள் எனது கணவனை கூட்டிச்சென்றனர். வானில் வந்தவர்களையோ, வானின் இலக்கத்தையோ எனக்குத் தெரியாது. 85 ஜூலை 30ம் தேதி மாலை 3 மணிக்கு என் சகோதரியின் சடலம் தகனம் செய்யப்பட்டது. இரவு 8 மணிக்கு என் கணவனுக்கு மரணதண்டனை விதித்து பஸ் நிலையத்தில் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருப்பதாக அறிந்தேன். காலையில் ஆஸ்பத்திரிக்குச்சென்று அடையாளம் காட்டினேன்

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க

## கூட்டணி —

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிவசிதம்பரம் தலைமை வகிப்பார்.

தமிழ்த் தீவிரவாத இயக்கங்களின் முக்கிய தலைவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

பூட்டானில் இம்மாதம் பன்னிரண்டாம் திகதி நடைபெறும் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியத்துவம் பெற்றிருப்பதால் தீவிரவாத இயக்கங்கள் சார்பில் இதில் கலந்துகொள்வோர் குறித்து மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென்ற கருத்து நிலவியதைத் தொடர்ந்தே இன்ற மேற்படி கூட்டம் நடைபெற்கிறது.

திம்பு மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கலந்துகொள்பவர்களில் எவ்வித மாற்றமும் ஏற்படமாட்டாது, அதே நேரத்தில், தீவிரவாத இயக்கங்கள் சார்பில் சட்டத்தரணிகளை நியமிக்கலாமா என்ற கருத்து இப்பொழுது நிலவுகிறது. இன்றைய கூட்டத்தில் இது குறித்து இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

## டி. ஐ. ஜி.டில்லி சென்றார்.

நிலைமை இவ்வாறிருக்க, பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ரெறில் பெரேரா புதுடில்லி சென்றுள்ளார்,

இரகசியப் பிரிவின் முன்னாள் தலைவரான இவர்; இந்தியாவில் பொலிஸ் நிர்வாகம் எப்படி இயங்குகிறது என்பது குறித்து அறிந்துகொள்வார்;

பொலிஸ் நிர்வாகத்தில், இந்தியா எப்படிச் செயல்படுகிறது என்பது பற்றியும், மத்திய மாநில விஷயத்தில் பொலிஸார் எப்படி இயங்குகின்றனர். அவர்களது தொடர்புகள் எவ்விதம் அமைந்திருக்கிறது என்பது பற்றியும் மத்திய-மாநில பொலிஸார் உறவுகள். செயற்பாடுகள் சம்பந்தமாகவும் அவர் விரிவாக ஆராய்வார்.

## முஸ்லிம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரணி ஏ. எம். எம். சஹாப்தீன், மௌசூர் மௌலானா, அமவி ஹமீபா, ஜனாப் எம். எம். மூஸ்தபா, ஜனாப் ஏ.எல். அப்துல் மஜீத், ஜனாப் ஏ.எல். எம். ஹமீத, ஜனாப் ஏ' அஸீஸ் ஆகியோர் அடங்குவர். (மா)

## கோட்டை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நோக்கி வரவேண்டிய அத்தனை ரயில்களும் மருதானையிலும், வேறு இடங்களிலும் நிறுத்தப்பட்டன ரயில்நிலைய ஊழியர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இராணுவத்தினரும், பொலிஸாரும் ரயில் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு மூலைமுடுக்கெல்லாம் நுணுக்கமாகச் சோதனையிடப்பட்டு 'ஒன்றுமில்லை' என்று தெரிவித்தபின்னரே ரயில் நிலைய ஊழியர்களும் அதிகாரிகளும் நிம்மதி பெற்றனர் அதனைத் தொடர்ந்து சுமார் அரைமணி நேரத்தில் ரயில்களும் மூச்சுவிடத் தொடங்கிற்று.

## இன்று

(யாழ்ப்பாணம்)

முருகப்பெருமான் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கதிர்காமத் திருத்தலத்தின் தீர்த்தத்திருவிழா இன்று நடைபெறுகிறது. வள்ளி தெய்வயானை சமேதராக சண்முகப்பெருமானை நினைந்து தியானித்துப் பாராயணம் பண்ணி வேற்பெருமான் திருவடிகளை நினைவில் கொள்வோமாக.

★

நயினாதீவு காட்டுக்கந்த சுவாமிகோயில் ஆடிப்பூசை யொட்டி தீர்த்தவிழாவும் அன்னதானமும் இன்று நடைபெறும். (நா)

## கடத்தப்பட்டார்!

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டைச் சேர்ந்த கெட்டியராஜ் கருணதாஸா என்பவர் இனந்தெரியாத ஆயுதநபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவர் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தரென்றும் ஆனைக்கோட்டையிலுள்ள 'விஜிதா' என்ற பேக்கரியில் பணியாற்றியவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தடியில் தமிழ்ப்பெண் ஒருவரை மணஞ்செய்துகடந்த பல வருட காலமாக இங்கு வசித்துவரும் இவர் இரு பெண் பிள்ளைகளுக்குத் தந்தையாவார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இவரைக் கடத்திச்சென்றவர்கள் இக்கடத்தலுக்கான காரணத்தையோ அல்லது தாம் யார் என்பதையோ தெரிவிக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

## சீக்கிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷனர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இந்திரா காங்கிரஸ் எம். பி திரு. லலித் மாக்கன், அவரது மனைவி கீதாஞ்சலி மாக்கன், மற்றுமொரு நபர் பலகிருஷ்ணன் ஆகியோர் பலியானார்கள். காயமடைந்த சுரேஷ் என்பவரின் நிலைமை கவலைக்கிடம் என்று நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org